

# ஸ்ரீ கோதாஸ்துதி

## ஸ்லோகம்-16

த்வந்மௌளி தாமநி விபோ: ஶிரஸா க்ருஹீதே ।
ஸ்வச்சந்த கல்பித ஸபீதி ரஸ ப்ரமோதா: ।
மஞ்ஜு ஸ்வநா மதுலிஹோ விதது: ஸ்வயம் தே।
ஸ்வாயம்வரம் கமபி மங்கள தூர்ய கோஷம்॥

<u>அர்த்தம்</u>

ஜகத்பிரபுவாகிய ரங்கநாதப் பெருமனின் திருமுடியால் அலங்காரமாக தரிக்கப் பெற்ற உன்னுடைய சூடிக்களைந்த மாலையிலுள்ள வண்டுகள், தன் மனம் போனபடி ஸமூஹமாக தேனை உண்டு , களிப்புற்று, இனிய குரலில், ரீங்காரம் எழுப்பின. அப்பேரொலி, நீ ஸ்வயம் வரத்தில் மணம் புரிகையில் உனக்கு மங்கள வாத்ய கோஷமாக அமைந்தது.

## ஸ்லோகம்-17

விஶ்வாயமாந ரஜஸா கமலேந நாபௌ ।
வக்ஷ:ஸ்தலே ச கமலா ஸ்தந சந்ததேந ।

ஆமோதிதோபி நிகமைர்விபுரங்க்ரி யுக்மே ।
தத்தே நதேந ஶிரஸா தவ மௌளி மாலாம்॥

<u>அர்த்தம்</u>

ஸர்வ ஜகத்காரணனும், நியந்தாவுமான திருவரங்கத்தம்மான், ஓரோர் துளியும் ஓரண்டமாகும் பெருமையையுடைய தாமரைபூவினால் உந்தியிலும், அதே போல தாமரையாளின் கொங்கையில் பூசப்பட்ட சந்தன நறுமணத்தால் திருமார்பிலும் , மேலும் வேதங்களினால் திருவடியிணைகளிலும் கந்தம் கமழப் பெற்றிருந்தபோதிலும், கோதாதேவி! வணங்கிய தலையால் உன் சிரோ மாலையை ,திருமுடியில் தரிக்கிறார்.

## ஸ்லோகம்-18

சூடா பதேந பரிக்ருஹ்ய தவோத்தரீயம் ।
மாலாமபி த்வதளகை ரதிவாஸ்ய தத்தாம் ।
ப்ராயேண ரங்கபதிரேஷ பிபர்த்தி கோதே ।
ஸௌபாக்ய ஸம்பதபிஷேக மஹாதிகாரம் ॥

<u>அர்த்தம்</u>

ஹே கோதாதேவியே! இந்த ரங்கநாதப் பெருமாள், உன்னுடைய ஸ்தன உத்தரீயத்தையும், உன்னுடைய குழல்களினால் மணம் ஏற்றப்பட்டுக் கொடுக்கப்பட்ட மாலையையும், திருமுடியால் ஏற்று அணிந்து, தானே மங்களமாயும்,மங்களத்தைச் செய்விப்பதுமாகிற ஐச்வர்யத்தில், முடிசூடியிருக்க பாக்யம் பெற்றேனென்ற பெரிய தகுதியை அநேகமாக தரிக்கிறார் போலும்.

## ஸ்லோகம்-19

துங்கை ரக்ருத்ரிமகிர: ஸ்வயமுத்தமாங்கை: ।
யம் ஸர்வகந்த இதி ஸாதர முத்வஹந்தி ।
ஆமோத மந்யமதிகச்சதி மாலிகாபி: ।
ஸோபி த்வதீய குடிலாளக வாஸிதாபி: ॥

## அர்த்தம்

அபௌருஷேயமான ஸ்ருதிகள்,தங்கள் உன்னதமான சிரஸுகளால் அதாவது, உபநிஷத்துகளால், எந்த பகவானை ஸர்வகந்தன் என்று தாங்குகின்றனவோ(கொண்டாடுகின்றனவோ) அந்த பகவானும், உன்னுடையதான, அலையலையாகச் சுருண்ட குந்தங்களால் மணமூட்டப் பெற்ற மாலைகளால்,வேறுவிதமான (ஓர் புதிய) வாஸனையை அடைகிறார்.

## ஸ்லோகம்-20

தந்யே ஸமஸ்த ஜகதாம் பிதுருத்தமாங்கே ।
த்வந்மௌளி மால்யபர ஸம்பரணேந பூய : ।
இந்தீவர ஸ்ரஜமிவாதததி த்வதீயாநி ।
ஆகேகராணி பஹுமாந விலோகிதாநி ॥

## அர்த்தம்

கோதாய்! நீ சூடிக்கொடுத்த மாலையின் மிகுதியைச் சிரமேல் தரித்தலால் மிகவும் பேறு பெற்றதான, ஸர்வஜகத்பிதா எம்பெருமானுடைய சிரஸ்ஸில், நீ வீசிவெளியிடும் அநேக பஹுமானங்கள் செய்தது போலான, ஆகேககரம் என்கிறஅரைக்கண் பார்வைகள், ஒரு நெய்தல்மலர் மாலையைப் பெருமாள் சிரஸிற்கு சாத்தினது போல தோன்றிற்று.

---------------------------------------------